1970 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து மத்திய அரசு ஒட்டுமொத்தமாக எல்லாத் திட்டங்களுக்கும் என்று இவ்வளவு காலம் கொடுக்கவில்லை. கடந்த ஆண்டிலேதான் அப்படிக் கொடுக்கிருர்கள். நிலம் விடு கட்டுவதற்கு என்று தனியாக மத்திய அரசாங்கம் இப்போது நிதி எதுவும் ஒதுக்க வில்லை. மத்திய அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு வீடுகளை இன்ன வகையில் கட்ட வேண்டுமென்று ஒரு திட்டம் தந்து இருக்கிறது. ரூ. 5,000 செலவில் ஒரு தனி வீடாகக் கட்டுவதற்குத் திட்டம் போட்டு வீடு கட்டுகிறது. அதற்கு ஒப்புதல் State Housing Board, Chief Engineer (Buildings) இருவரும் ஒப்புதல் கொடுக்கிற அளவுக்கு ஒரு புதிய டிசைன் வேண்டும். அதை ஒப்புக்கொண்ட பிறகு ரூ. 5,000 அவர்களுக்கு கொடுக்கப்படும். அதற்காக ஒப்புதல் பெற்று அனுப்பவேண்டுமென்று கேட்கிருர்கள். அந்த வகையில் State Housing Board, Chief Engineer (Buildings) 220 சதுர அடி ரூ. 3,400-ல் ஒரு வீடும், 320 சதுர அடி ரூ. 4,500-ல் ஒரு வீடுமாக இரண்டு திட்டங்கள் கொடுத்து இருக்கிருர்கள். அவைகள் இன்று நலத்துறை இயக்குநரின் பரிசீலனையில் இருக் கிறது. பிறகுதான் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டால் இந்தத் திட்டத்தின்கீழ் மத்திய அரசாங்கம் மான்யத்தோடு வீடு கட்ட லாம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஹரிஜனங்களுக்கு ஒரு வீடு கட்டக் கடன் எவ்வளவு, மான்யம் எவ்வளவு ? அதைக் கட்டிக் கொடுக்க அரசு ஏதேனும் கடன் தருகிறதா ? அப்படிக் கொடுக்கிற பணத்திற்கு வட்டி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்பு மிகு உறுப்பினர் அவர்களிடம் பணம் இருந்தால் கொடுக்கலாம். அரசு அதை வரவேற்கும். ஆனல் ரூ. 9[illegible]0 என்ற மதிப்பீட்டில் ஒரு வீடு. அதில் ரூ. 250 அவர்களுக்குக் கடனைக் கொடுக்கப்படும். மிஞ்சிய பணம் மான்யமாகத் தரப்படும். அந்த ரூ. 250 ஐ 100 சமத் தவணைகளில் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். வட்டி கிடையாது.

கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் கண்டு பிடிக்கப்பட்ட புதுவகை நெல்.

*71வினு—**திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமீபத்தில் கோவை விவசாய ஆராய்ச்சிப் பண்ணை யில் (Agriculture Farm) கண்டு பிடிக்கப்பட்ட புதுவகை நெல் யாது ?

(இ) அதற்கு என்ன பெயரிடப்பட்டுள்ளது?

[1970 ஆகஸ்ட் 27

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஐ.ஆர். 8, ஆடுதுறை 27 ஆகிய இவ்விரண்டு இனங்களின் புதிய கலப்பினம் ஒன்று கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, 1970 பிப்ரவரியில் வெளியிடப் பட்டது.

(இ) இந்தப் புதிய வகை நெல்லுக்கு "கருணை" என்று பெயரிடப்பட்டுள்ளது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த நெல் எந்த பருவத்தில் சாகுபடி செய்வதற்கு லாயக்காக உள்ளது? அது இப்போது எந்த மாவட்டத்தில் பயிரிடப்படுகிறது. இப்போது கருணை என்று இதற்கு பெயர் வைத்து இருப்பதால், இனி கண்டு பிடிக்கப்படும் நெல்லுக்கு மற்ற அமைச்சர்களின் பெயர் வைக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : குறுவை காலத்தில் இந்தப் பயிர் இடலாம் என்று கூறப்படுகிறது. இன்னும் இந்தப் பயிர் அதிகப்படியான விதைகளை உண்டாக்கவேண்டு மென்று, பல விதைப் பண்ணைகளில் பயிரிடப்பட்டு வருகிறது. தேவையான விதைகள் வந்த பிறகுதான் அது மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும். 'கருணை' என்று பெயர் வைத்திருப்பது மாண்புமிகு முதலமைச்சர் பெயர்தான். இன்னும் அதிக அமைச் சர்களின் பெயர் மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால் வைப்போம். ஆட்சேபணையில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கூடிய விரைவில் 13 ரக விதைகள் கண்டுபிடிக்கப்பட்டு, அமைச்சர்கள் பெயர் வைக்கப்படுமா? அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டால், மறுபடியும் அதற்கு தகுந்தமாதிரி கண்டுபிடிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அது எங்களைப் பொறுத்த விஷயம். எதிர்க்கட்சித் தலைவர் அதைப்பற்றி ஆயாசப்படத் தேவையில்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இதுவும் ஐ.ஆர். 8, ஆடுதுறை 27 ஆகியவற்றின் கலப்படமா? இந்த 'கருணை' எந்தக் காலத்தில் பயிரிடலாம். இதன் சிறப்புத் தன்மைகள் என்ன? இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது ஐ.ஆர். 8 கலவைதான். சி.ஓ. 35 என்று இதற்குப் பெயர். அதற்கு கருணை என்று பெயர் சூட்டியிருக்கிறோம். இதன் சிறப்பு மிகவும் அதிகம். அமோக விளைச்சல் தரும். ரசாயனக் கலப்பு உரங் களுக்கு ஈடு கொடுக்கும். கதிர் சாயாது. உருண்டையான தானி யங்களைக் கொடுத்து சிறந்த தரம் உடையது. தஞ்சாவூர் மாவட் டத்தில் இந்த நெல் விளைச்சலுக்கு ஏற்றது.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister the maximum yield that is produced by 'Karuna' per acre?

1970 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆடு துறை 27 என்ற நெல் 1 ஏக்கருக்கு 1,726 கிலோ விளைந்தால், இந்த 'கருணு' என்கிற நெல் ஒரு ஏக்கருக்கு 1998 கிலோ குறைந்த அளவு, 2,228 கிலோ வரிஏய்ப்பு அதிகப்படி அளவு விளையும்.

வரி ஏய்ப்பு.

* 68 வினு—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு உணவு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜ்ய வர்த்தக வரி இலாகா அதிகாரிகள் 1969 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மொத்த வியாபாரக் கடை களையும், எண்ணெய் ஆலைகளின் விற்பனை இடங்களையும் சென்னை யில் சோதனை போட்டார்களா ?

(இ) அதனுல் சர்க்காருக்கு எவ்வளவு வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) வரி ரூ. 1,91,735.83.

(இ) அபராதம் ரூ. 31,944.45.

கால்நடை மருந்தகங்கள்

* 72 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கிருஷ்ணராயபுரத் திற்கென கால்நடை மருந்தகம் ஒன்றை ஏற்படுத்த 1968-ம் ஆண்டி லேயே அரசு அனுமதித்துள்ளது. 1–2–1969 முதல் அது நிரந்தர மான கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, லாலாப் பேட்டை, பழைய ஜெயங்கொண்டம், கொசூர் போன்ற இடங்களில் கிளை மருந்தகம் இதுவரை துவக்கப்படவில்லை. இதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

* 73 வினு—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியில் எத்தனை புதிய கால்நடை மருந்தகங் கள் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏதுவுமில்லை.